2nd February 1966]

THE HON. SRI R. VENKATARAMAN : The High Court has said that it is not necessary to have inspection by third parties. The hon. Member should know that section 52 relates to inspection of documents by third parties. The High Court has said that inspection by a Member of the Board and departmental officials is valid. But they have said that inspection by third parties is not necessary.

MR. SPEAKER : The hon. Member has not gone through the judgment. Perhaps the hon. Member wants to know whether the Hon. Minister has studied the judgment.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : போலிச் சீட்டுகள் நடத்தினர்கள் என்று எத்தனை கேஸ்கள் கண்டு பிடிக்கப்பட்டு தண்டனை கொடுக்கப்பட்டிருக்கிறது ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இம்மாதிரி கேள்வி போட்டால் இதற்குத் தனியாக நோட்டீஸ் கொடுத்துதான் கேட்க வேண்டும். ஏனென்றால் ராஜ்யம் பூராவும் எத்தனை போலிச் சீட்டுகள் நடந்திருக்கின்றன, என்ன நடவடிக்கைகள் எல்லாம் எடுக்கப்பட்டிருக்கின்றன என்ற தகவல் இந்தக் கேள்வியில் இருந்து எழாது.

தமாஷா வரிவிலக்கு

*50 கேள்வி.—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னையில் தயாரித்து வெளியிடப்பட்ட "ரத்தத் திலகம்" என்ற திரைப்படத்திற்கு தமாஷா வரிவிலக்கு அளிக்கப்பட்டது உண்மையா ?

(இ) ஆமெனில், அதன் விவரமென்ன ?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) No, Sir.

(b) Does not arise.

சென்னை மாநகரில் குடிசைப் பகுதிகள்

*51 கேள்வி.—திரு. இராம அரங்கண்ணல் : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சென்னை மாநகரில் கார்ப்பரேஷன், புறம்போக்கு, கோயில், சர்க்கார் மராமத்து ஆகிய இடங்களில் முறையே எத்தனை குடிசை வாழ் பகுதிகள் இருக்கின் ~~ ?